[2nd March 1959

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, there have been some proposals. But, I would like the hon. Member to put a separate question if he wants to know the details.

* 490 *Q.*—SRI V. ARUNACHALA THEVAR : Will the Hon. the Minister for Home be pleased to state the present stage of the construction of a masonry dam across (i) Agniyar near Sinayakudi and (ii) Koraiyar near Mullaiyoor in Kulathur taluk, Tiruchirappalli district?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government have decided that the construction of an anicut across Agniyar near Sinayakudi in Kulathur taluk, may be taken up later, if there is sufficient water in the river, after watching the results after the construction of an anicut near Thittanpatti in Alangudi taluk is completed.

The scheme for construction of an anicut across Koraiyar near Mullaiyoor, is being investigated by the Executive Engineer, Special Minor Irrigation Programme Division.

SRI. V. ARUNACHALA THEVAR : முள்ளி ஆறு அணைக் கட்டினால் மொத்தம் எத்தனை எக்கர் பாயக்கூடும் என்று சொல்லமுடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதனால் 1,292 எகராக்கள் புதியதாக பயன் அடையும். அது அல்லாமல் 1,833 எக்கராக்களுக்கு இப்பொழுது கிடைக்கக் கூடிய தண்ணீரை விட கொஞ்சம் அதிகமாக தண்ணீர் கிடைக்கச் செய்யும்.

New cars for Ministers

* 491 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of new cars purchased for the use of the Ministers during the current year (1958);

(*b*) the total cost thereof; and

(*c*) the Ministers for whom these new cars were purchased?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) One.

(*b*) Rs. 22,572·33 nP.

(*c*) The car was allotted to the Minister for Local Administration.

SRI M. KALYANASUNDARAM : இந்தப் புது கார் வாங்குவதற்கான காரணம் என்ன ? பழைய கார் எப்படி விற்கப்பட்டது ? அதனால் கிடைத்த தொகை எவ்வளவு ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தப் பழைய கார் சேதமானது. ஷெவர்லே கார் சேதமானது அங்கத்தினர்களுக்கு தெரிந்திருக்கலாம். சில சமயங்களில் சேதமானது கூட லாபமாக இருக்கும் என்று இப்பொழுது தோன்றுகின்றது. ஏனென்றால் அது ஏலத்தில் ரூ. 21,300-க்கு விற்கப்பட்டது. நாம் அதற்கு கொடுத்த விலை ரூ. 12,000 அல்லது ரூ. 13,000 தான் (சிரிப்பு).

2nd March 1959]

SRI A. GOVINDASAMI : ஒரு அமைச்சருடைய காரை வேறு ஒருவர் எடுத்துச் சென்று மோதி அந்தக் கார் ரிப்பேராகப் போனதாக சொல்லப்படுகிறது. அந்தக் கார் திரும்பி வந்துவிட்டதா? அல்லது "கண்டெம்" செய்யப்பட்டு விட்டதா ?

MR. SPEAKER : அது மாதிரி யார் சொன்னது ? (சிரிப்பு).

T.B. Seals

*492 *Q.*—SRI. P. G. MANICKAM : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்ய க்ஷயரோக சீல் விற்பனை மூலமாக 1958-ம் வருஷத்திலே எத்தனை ரூபாய்கள் வசூல் செய்யப்பட்டன ?

(ஆ) என்னென்ன காரியங்களுக்காக இத்தொகை செலவிடப்படும் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Rs. 33,249·91 in 1957–58 (8th Tuberculosis Seals Sales Campaign).

(*b*) (1) Establishment of isolation wards for advanced tuberculosis cases.

(2) Putting up wards or clinics.

(3) Formation of Care-Committees to assist indigent Tuberculosis patients.

(4) Stimulation of activities of District Tuberculosis Association.

(5) After-care of Tuberculosis patients.

(6) Purchasing of essential equipment such as X-ray, etc.

(7) Introduction and expansion of Home Treatment Service.

(8) Assisting suitable persons to be trained as social workers and Health Visitors.

SRI A. A. RASHEED : Out of the amount collected, has any amount been given to the Central Tuberculosis Prevention Association?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir. Five per cent of the collection is to go to the Central Tuberculosis Association besides the cost of materials supplied, viz., T.B. Seals, other publicity, pamphlets, etc.

Grievances of Tannery workers

*493 *Q.*—SRI S. R. MUNUSAMI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள 7,000 தோல் பதனிடும் தொழிலாளர்கள் தங்களுக்கு முதலாளிகள் செய்துவரும் கொடுமைகளைப் பற்றியும் "போனஸ்" சம்பந்தமாய் தொழில் கோர்ட்டார் செய்த தீர்ப்பைக் கொடுக்க மறுப்பதைக் கோரியும் இன்னும் மற்ற கோரிக்கைகள் கொண்ட ஜாபிதாவை அரசாங்கத்துக்கு அனுப்பியதுண்டா ?

(ஆ) அப்படியானல், அதன்பேரில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?